**அக்னி ஊழியங்கள்**

**பத்திரிக்கை** – **சுத்திகரிக்கும் அக்னி**

**புத்தகங்கள்** –

**ஒலி நாடாக்கள்** –

**ஒளி நாடாக்கள்** –

**வேத கலா சாலை** –

**விபரங்களுக்கு**

**சாது செல்லப்பா**
**5, 5வது குறுக்குத்தெரு**
**இந்திரா நகர்**
**சென்னை 600 020.**
**தொலைபேசி எண் (44) 416729**


K. Vinayagamoorthy.

## வர்ணாசிரமம் தர்மமா? ஏன்?

சாதி இரண்டொழிய வேறில்லை.... இட்டார் பெரியோர் இடாதோர் இழிகுலத்தோர் என்று ஔவையாரும்

சாதிகள் இல்லையடி பாப்பா என்று பாரதியாரும் பாடின பாடல்களுக்கு மத்தியில், சாதி வெறி பிடித்த மக்கள் கூட்டமும் அம்மக்களைத் தூண்டிவிடும் கட்சிகளும் கழகங்களும் நிறைந்த நாட்டில் வாழ்ந்து வருகின்றோம்.

ஒவ்வொரு நாளும் நாட்டின் எங்காவது ஒரு மூலையில் சாதிச் சண்டைகள் நடந்து கொண்டே இருக்கின்றன. அனேக மனித இரத்தங்கள் சிந்தப்பட்ட வண்ணம் இருக்கின்றன. ஆப்பிரிக்கா தேசத்தில் நுழைந்த வெள்ளையர்களைக் கருப்பர்கள் வெட்டிச் சாப்பிட்டதைக் காட்டு மிராண்டித்தனம் என்று சொன்னோம். இன்று, இந்தியாவில் வர்ணா சிரமத்தின் பெயரால் மனிதர்களைப் பலியாக்குவது எந்தத் தனம் என்று விளங்கவில்லை!

ஜாதி இந்துக்களுக்கும் அரிசனங்களுக்கும் மோதல் என்று செய்தித் தாள்களில் காணும்போது, அந்த அரிசனங்கள் இந்துக்கள் இல்லையா என்று யோசிக்கத் தோன்றுகிறது. அவர்கள் இந்துக்களே என்றால் இந்துக்களுக்கும் இந்துக்களுக்கும் மோதல் ஏற்படுவது எதினால் என்ற கேள்வியும் கூடவே எழும்புகிறது. இதற்குப்பதில் சாதியே என்றால் அது மிகையில்லை.

ஆதி திராவிட நாட்டில் சாதிகள் இருந்ததாகத் தெரியவில்லை. சங்க நூல்களோ, இலக்கியங்களோ சாதிகளைப் பற்றி எதுவும் சொல்லவில்லை. அந்தணர் (பார்ப்பனர் அல்ல) , அரசர், வணிகர், தொழிலாளி என்ற நால்வகை மக்களைக் குறித்து சங்க இலக்கியங்களில் செய்தி உண்டு.

அந்தணர் என்போர் அறவோர் என்று வள்ளுவர் கூறியபடி இச்சொல் இறையறிவுடைய, இறைத்தொண்டு செய்கின்ற இல்லறம் அல்லது துறவறத்தையுடைய தூய்மையுடையோர் என்பது பொருளாகும். அந்தணர் என்ற சொல் ஆரியரையோ, பிராமணர்களையோ குறிக்கும் சொல்லாகப் பிற்கால வழக்கில் ஏற்பட்டதாகும். ஆதியில் தெய்வ பக்தியுள்ள எவரையும் அந்தணர் என்றே அழைத்தனர்.

ஆதித்திராவிடத் தமிழர் இயற்கையை வணங்கி ஒரே இனமாக்த் தமிழ் இனமாகத் திராவிட இனமாக வாழ்ந்து வந்தனர். தொழிலால் மாறுபட்டாலும் திராவிட இனமாகவே வாழ்ந்தனர். சலவையாளரின் வீட்டுப் பெண்ணைப் போர் வீரன் மணப்பதும், வைத்தியர் வீட்டுப் பையன் கொல்லர் வீட்டில் சம்பந்தம் செய்வதும் இருந்தது. யாதும் ஊரே யாவரும் கேளிர் என்று வாழ்ந்த திராவிட இன மக்களுக்குள் இச்சாதிகள் எப்படி ஏற்பட்டன என்பது ஆராயத் தக்கது.

சுமார் 4000 ஆண்டுகட்கு முன்பு தங்கள் ஆடுமாடுகளுடன் வசிக்க இடம் தேடிக் கைபர் - போலன் கணவாய் வழியாகத் திராவிட நாட்டிற்குள் நுழைந்த ஆரியர், தங்கள் தந்திரங்களினாலும் போரினாலும் திராவிடர்களைத் துரத்திச் சிந்துச் சமவெளியைக் கைப்பற்றிக் கொண்டனர். பெருவாரியான திராவிடர் தெற்கு நோக்கி ஓடினர். பலர் கிழக்கே தஞ்சம் புகுந்தனர். சிலர் குழுக்களாக மலைகள்



காடுகளுக்குப் போயினர். பலர் ஆரியர்களால் கொல்லப்பட்டனர், அடிமைகளாக்கப்பட்டனர். அடிமைகளுக்குத் 'தஸ்யு' க்கள் என்று பெயர். ஆரியர்களின் ரிக் வேதத்தில் தஸ்யு என்ற பெயர் அனேக இடங்களில் காணப்படுகிறது. இதுவே பிற்காலங்களில் தாஸர், தாஸ், தாஸன் என்று மருவிற்று.

ஆரியர்களின் சிவந்த நிறமும், உயரமும், அகன்ற நெற்றியும், கல்வியும் திராவிடரிடம் குறுகிய மனப்பான்மையை ஏற்படுத்தியதில் வியப்பில்லை. இன்றும் கருப்பு நிறமுடையோர் தாங்களாகவே சிவப்பு நிறமுடையோரிடம் தாழ்ந்து போவது கண்கூடு.

ஆரிய ஆதிக்கம் வடக்கில் பரவிய போது, அங்கு வாழ்ந்த திராவிடர், தங்கள் தாய் மொழியை நாளடைவில் மறந்து ஆரிய மொழி பேசுவோராயினர்.

மலைகளுக்கும் காடுகளுக்கும் ஓடிச் சென்ற குழுக்கள் நாளடைவில் தங்கள் தமிழ் மொழியை மறந்து, கல்வியின்மையினாலும், மற்ற மக்களுடன் கலந்து பழக வாய்ப்பின்மையினாலும் நாகரிகமற்ற மக்கள் கூட்டமாயினர். இவர்களை ஆதிவாசிகள் (Tribals) என்று அழைக்கிறோம். உண்மை என்னவெனில் இம்மக்களே இந்நாட்டின் பூமிபுத்திரர்கள். ஆனால் இவர்கள் எங்கிருந்தோ வந்து குடியேறின மக்களால் ஆளப்பட்டு, சலுகைகள் பெற்று வாழவேண்டிய துர்பாக்கிய நிலையில் இருக்கிறார்கள்.

தெற்கே வந்த திராவிட மக்கள் தங்கள் பண்பாலும் வீரத்தினாலும் ஆரியர்களின் தலையீடின்றிச் சேரர், சோழர், பாண்டியர்கள் என்ற மூக் குலத்தோராய் ஒற்றுமையுடன், ஒருவருக் கொருவர் பெண் கொடுத்தும், கொண்டும் வாழ்ந்தனர்.

இந்நிலையில் கி.மு. 850 ஆண்டளவில் சமண மார்க்கமும் பௌத்த மார்க்கமும் பரவ ஆரம்பித்த போது, திராவிடர்களில் அனேகர் அரசர்கள் உட்பட சமணமார்க்கத்தாராயினர். ஆயினும் அவர்களுக்குள் சாதிகள் இல்லை. கி.பி. முதல் நூற்றாண்டு காலத்தில் கிறிஸ்து இயேசுவின் அருட் செய்திகள் அவருடைய பன்னிரெண்டு சீடர்களில் ஒருவராகிய தோமா என்பவரால் தென் தமிழ் நாட்டில் பரவ ஆரம்பித்து அனேகர் கிறிஸ்துவர் ஆயினர். அப்போதும் சாதிகள் ஏற்பட்டதில்லை. சுவாமி விவேகானந்தரின் கருத்துப்படி கி.பி. முதல் நூற்றாண்டில் சுமார் முப்பது இலட்சம் கிறிஸ்தவர்கள் தென் தமிழ் நாட்டில் இருந்தனர். (ஞானதீபம்)

வட இந்தியாவைத் தங்கள் ஆதிக்கத்தில் கொண்டு வந்த ஆரியர் பௌத்தமார்க்கத்தின் எழுப்புதலினால் ஒடுக்கப்பட்டனர். ஆரிய யாகங்களில் பசு, மாடு, குதிரைகள் போன்ற மிருகங்கள் பலியடப்படுவது தடுத்து நிறுத்தப்பட்டன. ஆரியர்களும் பௌத்த மார்க்கத்தை அண்டி வாழ்ந்து, தங்கள் மிருக பலிக் கொள்கைகளை விட்டுக் கொடுத்து மரக் கறியுண் போறாய் மாறினர். நாளடைவில் பெருவாரியான ஆரியர் பௌத்த மார்க்கத்தில் சேர்ந்து, அம்மார்க்கத்தை ஹீனயான, மஹாயான என்ற இரு மார்க்கங்களாக உடைத்து, ஒண்ட வந்த பிடாரி ஊர்ப்பிடாரியை விரட்டின கதையாய் பௌத்த மார்க்கத்தையே இந்தியாவை விட்டு விரட்டினர்.



## சுவாமி தர்ம தீர்த்த மகராஜ் அவர்களின் கருத்துப்படி.

1. "எல்லாப் படை யெடுப்பாளர்களுக்கும் பலம் வாய்ந்த கோட்டையாகத் திகழ்ந்த வடமேற்கு இந்தியா, பிராமணர்களுக்கும் பலம் பொருந்திய பிரதேசமாக இருந்தது. எனவே, கிரேக்க, துருக்கிய, சித்திய, சீன, ஹுணர் முதலிய படை யெடுப்பாளர்களோடு நட்புக் கொள்ள அவர்களுக்கு வாய்ப்பு ஏற்பட்டது. பௌத்த மன்னர்களையும், ஸ்தாபனங்களையும் தாக்கவும், நசுக்கவும் படையெடுப்பாளர்களைப் பயன்படுத்த வாய்ப்பேற்பட்டது.

2. பௌத்த ராஜாங்கங்களில் கலகங்கள் தூண்டி விடப்பட்டன. பல மன்னர்கள் கொல்லப்பட்டனர். பிராமண ஆதரவாளர்கள் அல்லது பிராமணர்களே மன்னர்களாக்கப்பட்டனர்.

3. பிராமணர்கள் புத்த மடாலயங்களில் சேர்ந்து விரைவில் அவற்றின் சொத்து, நிர்வாகம் மற்றும் மதம் சம்பந்தப்பட்ட கொள்கைகள் மீது ஆதிக்கம் செலுத்தத் தலைப்பட்டனர். (எந்தக் கட்சிப் பெரும்பான்மையோ அக்கட்சியினுள் எந்த வகையிலாவது நுழைந்து முடிவில் தலைமைப் பீடத்தைப் பிடிப்பது இன்றும் காணக் கூடியதே)

4. புத்தபிக்குகளாயிருந்த பிராமணர்கள் தீண்டாமையையும், தனித்தியங்கும் வழக்கங்களையும், ஜாதி உயர்வையும் அனுஷ்டித்தனர்.

5. பல பரிசுத்தவான்களையும் மரியாதைக்குரிய தேவதைகளையும் அவர்கள் தோற்றுவித்து மதக் குருக்களுக்கு பெரும் அன்பளிப்புகள் கொடுப்பதையும்

உருவங்களை வணங்குவதையும் உற்சாகப் படுத்தினர்.

6. உண்மையில் பார்க்கும் போது, அவர்கள் புத்த மார்க்கத்தினுள் பல தந்திரங்களையும், ஏமாற்றுக்களையும், மந்திரம், தந்திரம், யோகம், பெண்தெய்வ வணக்கம், காளி வணக்கம் போன்ற பிராமணீய சுரண்டல்களையும் நுழைத்து விட்டனர்.

7. அவர்கள் புத்தமார்க்கத்தை வட பிரதேசபிராமண பௌத்தம் என்றும் தென் பிரதேச பிராமணமற்ற பௌத்த மென்றும் இரண்டாகப் பிளவு படுத்துவதில் வெற்றி கண்டார்கள். இங்ஙனம் பௌத்தமார்க்கம் அதன் ஆன்மீக வலிமையை இழந்தது.

8. அவர்கள் பல அரசர்களுடன் ஒருவித உடன்பாடு செய்தார்கள். அதன்படி அவர்கள் க்ஷத்திரியர்களுடைய தத்துவத்தை அங்கீகரித்து அதைப் பிராமணீய முறைப்படியான கடவுள்கள், ஜாதிகள், பிராமணர் மேன்மை ஆகியவற்றுள் நுழைத்தார்கள். அவர்கள் அரசர்களின் ஒத்துழைப்போடு விக்கிரக வணக்கத்திற்கான பெருங் கோவில்கள் கட்டினார்கள். பெரும் வீரர்களான இராமன், கிருஷ்ணன் மற்றும் நூற்றுக்கணக்கான மூதாதையர்களைக் கடவுள்களாக வழிபடவும் ஆசித்தார்கள். இப்படியாகச் சாமானிய மக்களும் இந்தப் புதிய பிராமணீயத்திற்குப் பணிந்துவிட தூண்டப்பட்டனர். இப்புதிய பிராமணீயமே தற்போது இந்து மார்க்கம் என்று அழைக்கப்படுகிறது. கோவில்களில் மக்களைக் கவருவதற்காகவும் ஏமாற்றுவதற்காகவும் அவர்கள் தங்கள் பணத்தை இழக்கச் செய்வதற்காகவும் திருவிழாக்கள், அலங்காரங்கள், இசை, நடனம், விருந்து, துன்மார்க்கக் களியாட்டுக்கள், வினோதங்கள் போன்ற எல்லாச் சாத்தியப்பட்ட வழிகளையும் அவர்கள் கையாண்டார்கள்.



9. கோயில்களின் வருமானத்தைப் பகிர்ந்து கொள்ள மன்னர்களுடன் உடன்பாடு கொண்டனர்.

10. பெரும்பாலும் இந்த உடன்பாட்டினாலேயே க்ஷத்ரியரின் தத்துவமான பகவத்கீதை பிராமணீய இலக்கியமாகிய மகாபாரதத்தில் இடம் பெற்றிருக்கக் கூடும்.

11. பிராமணீய புராணங்களான இராமாயணமும், மகாபாரதமும் இன்னும் பலவும், ஜாதிச் சட்டங்கள், சாஸ்திரங்கள், சூத்திரங்கள் ஏனைய பிராமணீய இலக்கியங்கள் ஆகியவையும் விரிவாகப் பிரசாரப் படுத்தப் பட்டன.

12. அவர்கள், அயல் நாட்டிலிருந்து வந்தவர்களைக் கொண்டு ஒரு புதிய க்ஷத்ரிய கோஷ்டியை (இராஜபுத்தானியர்) சிருஷ்டித்தார்கள். அப்புதுக் கோஷ்டியினர் விக்கிரக வணக்கத்திற்கு ஆதரவு அளித்து அபு மலையில் ஒரு பெரிய யாகம் நடத்தினார்கள். பிராமணர்களால் சிருஷ்டிக்கப்பட்ட இப்புதுக் கோஷ்டியினர் புத்த மன்னர்களின் ஆட்சிக்குக் குழி தோண்டவும் புத்த மார்க்கத்தை அழிக்கவும் செய்தனர்.

கி.பி. 10ம் நூற்றாண்டு போல புத்த மார்க்கம் முற்றிலும் ஆரியர்களின் சூழ்ச்சியினால் தகர்க்கப் பட்டது. அனேக பௌத்த கோயில்கள் இந்துக் கோயில்களாக மாற்றப்பட்டன. (இராமர் கோயில் இருந்த இடத்தில் மசூதியைக் கட்டி விட்டார்கள். எனவே அது அகற்றப்பட்டு மீண்டும் இராமர் கோயிலே கட்டப்பட வேண்டும் என்று கூச்சலிடுவோர் அக்காலத்தில் எத்தனையோ பௌத்த மடாலயங்களை இந்துக் கோயில்களாக மாற்றினார்களே, அதினால், இப்போது பௌத்தர்கள் வந்து நியாயப்படிக் கேட்டால் விட்டுக் கொடுப்பார்களா என்பது சிந்தனைக் குரிய

கேள்வியாகும்) திராவிட மக்கள் தங்கள் தைரியத்தை இழந்து பிராமணீயத்தின் அடிமைகளாக மாறினர்.

**பெரும்பாலும் மொகலாயர்களின் வெற்றிக்குப் பின்பு பதினாறு எழுத்தாளர்களால் சாஸ்திரங்கள் எழுதப்பட்டன. அச்சாஸ்திரங்களில் சில.**

1. ஜாதிப்பாகுபாடு கண்டிப்பாக அனுசரிக்கப்பட வேண்டும்.

2. பொற் கொல்லர், சலவையாளர், நெசவாளர், தச்சர், வியாபாரிகள் முதலியோர் கீழ் சாதி மக்கள் என ஒதுக்கப்பட்னர்.

3. தீட்டாகுதல், தீண்டாமை ஆகியவை அமல் படுத்தப்பட்டன.

4. சில மக்கள் பிரிவினர் மிலேச்சர், சண்டாளர் என்ற பெயரில் தீண்டத்தகாதவர்களாக்கப் பட்டனர்.

5. இஸ்லாமியர், கிறிஸ்தவர், சீனர், ஜப்பானியர் முதலியோர் அசுத்தம் எற்படுத்தும் சுத்தமற்ற மக்கள் என அறிவிக்கப் பட்டனர்.

6. குற்றங்களுக்குத் தண்டனையும் உழைப்பிற்குக் கூலியும் ஜாதி அடிப்படையில் வழங்கப்பட்டன." (தடைக்கல் - தமிழாக்கம் - V.D. சகாயம்)

ஆரியர்கள் இவ்வாறாகத் திரவிடரின் நிலங்களையும் சொத்துக்களையும் கொள்ளையடித்தனர் என்றே சொல்ல வேண்டும்.

முதலாம் இராஜேந்திர சோழன் காலம் வரை பிராமணீயம் தென்திராவிட நாட்டில் ஆதிக்கம் பெறவில்லை. அதற்கு முன்பு சமணம், பௌத்தம், கிறஸ்தவம் ஆகிய மார்க்கத்தினர் தங்கள் மிஷனரி ஸ்தாபனங்களைக் கொண்டு ஊழியம் செய்து வந்தனர்.



தென் திராவிட நாட்டிலும் தங்கள் ஆதிக்கத்தைப் பரப்பிட வழிகாணுமாறு அனேக ஆரியர்கள் மிஷனரிகளாக வடக்கலிருந்து தெற்கே வந்தனர். வந்தவர்கள் நாளடைவில் தங்கள் ஆரிய மொழியை மறந்து தமிழ் கற்றுக் கொண்டு தமிழர் நாகரீகத்தைப் பின் பற்றினர். கோயில்களில் மந்திரம் ஓதுவதற்கு மட்டும் தங்கள் மொழியினை வைத்துக் கொண்டனர்.

நாளடைவில், மெதுவாக ஆனால் உறுதியாக தமிழர்களின் வழிபாட்டு இடங்களில் தங்களுக் கென்று ஒரு இடத்தை பிடித்துக் கொண்டனர். கடவுள் நம்பிக்கையற்ற சமண பௌத்தம் ஆகிய இரண்டு சமயங்களைக் காட்டிலும் கிறிஸ்தவக் கொள்கைகளின் அனேக தத்துவங்களை இவர்கள் மாற்றியெழுதி அவைகளைக் கதைகளாக்கி, அக்கதைகளின் மூலம் அனேக தெய்வங்களையும் சமயங்களையும் ஏற்படுத்தி நாளடைவில் சமணம், பௌத்தம், கிறிஸ்தவம் ஆகியவற்றையும் தென்திராவிட நாட்டில் ஒழித்துக் கட்டிய பெருமை இவ்வாரியர்களையே சாரும் என்றால் அது மிகை இல்லை.

சாதிகள் பற்றிய எண்ணமே இல்லாமல் வாழ்ந்து வந்த திராவிடத் தமிழர்களை இனத்தாலும் தங்கள் வேதத்தாலும் பிரித்து ஆள இயலாது என்று கண்ட ஆரியர், சாதிப் பிரிவுகளைத் திணிக்க ஆரம்பித்தனர். தங்களை எல்லோருக்கும் மேலான நிலையில் வைத்துக் கொள்ள அவர்கள் எடுத்த பிரயாசங்கள் ஏராளம். இவைகளை எதிர்த்த எந்த மனிதனும் அழிக்கப்பட்டான். சாதிக் கொடுமை அல்லது சாதி ஆதிக்கத்தை எதிர்ப்பவர்களை அரசாங்கமே கைது செய்வது என்பது அந் நாட்களில் மட்டுமல்ல. இந் நாட்களிலும் உண்டு என்பதற்கு மற்றுமொரு அண்மைச் சான்று 6.1.94 தினமணியில் வெளியிடப்பட்டுள்ளது.

அசுவமேத யாகம் துவங்கியது. சமூக சேவகிகள் கைது.

நாகபுரி, ஜன 5- மகாராஷ்டிர மாநிலம் நாகபுரியில் புதனன்று 11-வது அசுவமேத யாகம் எதிர்ப்புகளுக்கிடையில் கோலாகலமாகத் துவங்கியது. விசுவேஸ்வரய்யா பிராந்திய எஞ்ஜினீயரிங் கல்லூரி முன்புள்ள 90 ஏக்கர் நிலத்தில் துவங்கிய இந்த யாகத்தில் 5000 தொண்டர்கள் ஈடுபட்டுள்ளனர். யாகத்தை எதிர்த்துக் கிளர்ச்சி செய்த பெண் உரிமை அமைப்பைச் சேர்ந்த சமூக சேவகிகள் கைது செய்யப்பட்டனர்.

காயத்திரி தேவியின் பக்தர்கள் யாகத்துக்கு ஏராளமாகத் திரண்டனர். உ.பி.யில் உள்ள ஹரித்துவாரத்தைத் தலைமையிடமாகக் கொண்டு 1000 கிளைகளுடன் இயங்கிவரும் காயத்திரிமிஷன் இந்த யாகத்தை நடத்துகிறது. இதன் தலைவி மாதா பகவதி தேவியார். காலஞ்சென்ற ஆச்சார்ய ஸ்ரீராம் சர்மாவின் மனைவி இவர். யாகத்துக்கு எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. மனுபோதித்த வர்ணாசிரம முறையைத் திணிக்கும் முயற்சியே இந்த 'யாகம் என்று பெண் உரிமை அமைப்பைச் சேர்ந்த சமூக சேவகிகள் ரூபா போதி, சீமா சகாரே போன்ற சமூக சேவகிகள் எதிர்ப்புத் தெரிவித்தனர். பிராமணர் மேலாதிக்கத்தை மீண்டும் நிலைநாட்டுவதே யாகத்தின் குறிக்கோள் என்றும் அவர்கள் குற்றம்சாட்டினர். புதனன்று 10 கழுதைகளுடன் ஊர்வலம் நடத்த முயன்ற 60 பெண் உரிமை அமைப்பினர் கைது செய்யப்பட்டனர். ரூபா, சீமா ஆகியோரும் கைது செய்யப்பட்டவர்களில் அடங்குவர்.

(தினமணி 6.1.94).



அதுபோலவே எழுதப்பட்ட தமிழ் இலக்கியங்கள் அழிக்கப்பட்டன. யாரும் அறியாமல் மிகவும் ஜாக்கிரதையாகத் தங்கள் காரியங்களைச் சாதித்துக் கொள்வதில் இவர்களுக்கு நிகர் இவர்களே!.

எல்லோரிலும் தங்கள் இனமே உயர்ந்த இனம் என்பதை நிலை நாட்ட இவர்கள் எடுத்துக் கொண்ட முதல் காரியம் இவர்களின் ஆதி வேதமாகிய ரிக் வேதமாகும். ரிக் வேதத்தில் புருஷசூக்தம் என்றொரு பகுதியுண்டு. அதில் ஜனங்களின் பாவநிவாரண பலியாகப் பிரஜாபதி யாகிய இறைவன் மனித (புருஷ்) ரூபத்தில் தோன்றித் தன் சரீரத்தையே பலியாக்குவது குறித்துச் சொல்லப்பட்டுள்ளது. (புருஷபிரஜாபதி என்னும் தனி நூல் வாங்கிப் படியுங்கள்).

அப்பலி முடிந்தபின்பு பலியான இப்பிரஜாபதியை எப்படி உயிருடன் காட்டுவது என்ற ஒரு கேள்விக் குறியுடன் ஒரு பாடல் உள்ளது. (அகில உலகத்தையும் அதன் சிருஷ்டிகளையும் உண்டாக்கினவர் பிரஜாபதியே என்பதாலும் அனைத்துலக மக்களும் பிரஜாபதியே என்பதாலும் பிரஜாபதியாகிய புருஷனிலிருந்தே நால் வகை மக்கள் தோன்றினர் என்பது வேதக் கருத்தாகும்).

யத் புருஷம் வ்யதாதுஹ்
கதிதாஹ் வ்யா கல்பயன்
முகம் கிம் அஸ்ய கௌ பாஹு
கா ஊரு பாதௌ உச்யத்தே (12)

பலியாகக்கப்பட்ட புருஷ பிரஜாபதியின் முகத்திலிருந்து என்ன வரும்? கைகள், தொடைகள், பாதங்கள் ஆகிய வைகளிலிருந்து என்ன உண்டாகும்?

என்பதே அப்பாடலின் கருத்து.

இவ்வுலகமும் சர்வ சிருஷ்டியும் பிரஜாபதிக்குள் அடங்கியிருக்கிற படியினாலும், இவருக்காகவே சர்வமும் சிருஷ்டிக்கப் பட்டிருக்கிற படியினாலும், சகல பரிபூரணமும் இவருக்குள் அடங்கியிருக்கிற படியினாலும் இப்பிரஜாபதியைக் குறித்து விளங்கிக் கொள்வது அவ்வளவு எளிதான காரியமல்ல.

எனவே கேள்விகளைக் கேட்ட அதே ரிஷிகள் பதிலையும் சொன்னார்கள்:

**ப்ரா மணோஸ்ய முகம் ஆஸீத்**
**பாகு ரஜென்யா க்ரித் ஹா**
**ஊரு ததஸ்ய யத் வைஸ்யா**
**பாத்பியாம் சூத்ரோ அஜாயத (13)**

இப்பாடலின் சரியான பொருள் என்னவெனில்:

இறைச் சிந்தனையுடையவனும் இறைத் தொண்டு செய்பவனும் நற்குணசாலியும், அறிவும் ஆற்றலும் உடையவன் பிரம்மனின் சித்தத்தைச் செய்கிறவனாகப் பிராமணன் என்று அழைக்கப்படுகிறான். இவன் புருஷபிராஜாபதியின் முகத்திலிருந்து தோன்றின தேஜசுடன் இருக்கிறான்.

குடிமக்களைக் காக்க எச்சமயத்திலும் பகைஞருடன் போரிட்டு அவர்களை எல்லா நீதியுடனும் உண்மையுடனும் ஆளுகை செய்து தர்மத்தை நிலை நாட்டுகிறவன் க்ஷத்ரியன் என்னப்படுவான். இவன் புருஷபிரஜாபதியின் கைகளைப் போன்றவன்.

நாட்டு மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய வியாபாரம் செய்து பொருளாதாரத்தை உயர்த்தி நாட்டுக்குச் சிறப்பு அளிக்கிறவன் வைசியன் என்னப்படுவான். இவன் புருஷபிரஜாபதியின் தொடைகள் என்னப்படுவான்.



நாட்டு மக்களுக்கு பல்வேறு துறைகளிலும் அயராது உழைத்துப் பாடுபடுகிறவன் சூத்ரன் என்னப்படுவான். இவன் புருஷபிரஜாபதியின் பாதங்கள் என்னப்படுவான்.

இவைகள் எதைக் காட்டுகின்றனவென்றால், நானா விதமான மக்கள் கூட்டமும் ஒரே ஆண்டவனிலிருந்து தோன்றியுள்ள படியினால் யாவரும் சம அந்தஸ்து உள்ளவர்களே என்பதுதான்.

அவயவங்கள் பலவாயினும் ஒவ்வொன்றிற்கும் வித்தியாசமான தொழில் இருக்கின்றது. ஆனால் இவையாவும் சேர்ந்து சரீரமாகிறது. அவயவங்களில் கீழானது மேலானது, உயர்வுள்ளது, தாழ்வுள்ளது, அவசியமுள்ளது அவசியமில்லாதது என்று எவ்வித வித்தியாசமும் இல்லை. அதேபோல இறைவனின் படைப்பில் மனிதனுக்குள் ஏற்றத் தாழ்வுகளோ, உயர்வு தாழ்வுகளோ இல்லை என்பதுவே உண்மை.

துர் அதிர்ஷ்டவசமாக, தங்களை உயர்ந்த சாதியாகவும் மற்றவர்கள் தங்களுக்குக் கீழ்ப்பட்டவர்கள் என்று ஒதுக்கிவைப்பதற்காகவும் ஆரியர்கள் இந்தவேத மந்திரத்தைப் பயன் படுத்தித் தங்களுக்குக் கீழானவர்களை இழிவுபடுத்தவும், துன்புறுத்தவும், வளரவிடாமலும் செய்து அடிமைகள் போல வைத்துக் கொள்ள இம்மந்திரத்தைப் பயன்படுத்தினார்கள் என்பதே உண்மை.

தங்களை ஆரியர் என்று சொல்லிக் கொள்வதை விட்டுப் பிராமணர் என்று அழைத்துக் கொண்டு, பிராமணர் புருஷபிரஜாபதியின் முகத்திலிருந்து உதித்தபடியினால் மனித சமுதாயத்தில் தாங்களே உயர்பிறப்புடையோர் என்று அம்மந்திரத்தைத் தவறாகப் பாவித்தனர்.

எவனொருவன் இறைச் சிந்தனையாயிருந்து இறைத் தொண்டு செய்து சகல நற்குணங்களிலும் அன்பிலும் சிறந்து விளங்குகின்றானோ அவனே பிராமணன் என்ற வேதக் கருத்தை இவர்கள் பொய்யாக மாற்றி, இம்மந்திரத்தை வைத்து ஜாதிகளை உண்டாக்கினார்கள்.

ஜாதிகளை உண்டாக்கி அதை வெறித்தனமாக்கி ஒருவரையொருவ்ர் பகைக்கவும் வெறுக்கவும் செய்து சமுதாயத்திலிருந்த ஒற்றுமை, அமைதி, அன்பு, உறவு ஆகியவற்றை ஒழித்துக் கட்டினார்கள். ஜாதிகளுக்குள் சண்டைகளை உண்டாக்கி இரு தரப்பிலும் உண்டான அழிவில் இவர்கள் வாழத் தலைப்பட்டார்கள்.

ஊர் இரண்டுபட்டால் பூசாரிக்குக் கொண்டாட்டம் என்ற பழமொழி இவர்களாலேயே உண்டாயிருக்கலாம்.

இதைக்குறித்துச் சிலம்புச் செல்வர் திரு. மா.பொ.சி அவர்களுடைய கருத்தையும் அறிந்து கொள்ளுவது நல்லது.

'வேதம் விதித்த வருணங்கள் நான்கு. அவை அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்பனவாம். வட மொழியாளர் பிராமணர், க்ஷத்ரியர், வைசியர். சூத்ரர் என்பர். இந்த நான்கு வருணங்களின் உற்பத்தி பற்றி வேதம் கூறுவதாவது.

பிராமணர்கள் பிரம்மாவின் முகத்திலிருந்தும்
க்ஷத்ரியர் தோள்களிலிருந்தும், வைசியர்கள்
வயிற்றிலிருந்தும், சூத்ரர்கள் பாதத்தி
லிருந்தும் பிறந்தார்கள் (யஜுர் 32-11)

இதே விஷயம், மனுதர்ம சாத்திரம் (அத்தியாயம் 8 சூத்திரம் 31), வால்மீகி இராமாயணம் (ஆரண்ய காண்டம், சருக்கம் 14) ஆகியவற்றிலும் மாறுபாடின்றி



வலியுறுத்தப்பட்டுள்ளது. கடவுள் நம்மைப் போல் ஒரு மனிதரல்லவாதலால், நால் வருணப் பிறப்புப் பற்றிய மேற்படிச்செய்தி, கற்பனையாகச் சொல்லப்பட்ட தென்றே கொள்ள வேண்டும். சமுதாயத்தை ஒரு மனிதனாகக் கற்பித்து, அந்தந்த வருணத்திற்குச் சமுதாயத்திலுள்ள தொழில் முக்கியத்துவத்தை உணர்த்த வெவ்வேறு உறுப்புக்களோடு பொருத்திக் கூறப்பட்டுள்ளது.

தொழில் காரணமாகத் தோன்றிய நால்வருணப் பாகுபாடு பழங்காலத் தமிழர்களின் நாகரிக வளர்ச்சியைக் குறிக்கும் சமுதாய அமைப்பாகும். ஆனால், ஆதியில் வருணங்களிடையே ஏற்றத் தாழ்வோ, இழிவு-சிறப்போ இருந்திருக்க முடியாது. பிற்காலத்தில் அந்தத் தீமை புகுத்தப்பட்டு விட்டதால் வள்ளலார் வருணாசிரமத்தை வெறுத்துப் பாடினார். அவருக்குப் பின் தோன்றிய பாரதியாரும்,

நாலு குலங்கள் அமைத்தான்-அதை
நாசமுறப் புரிந்தனர் மூடமனிதர்
சீலம் அறிவு கருமம்- இவை
சிறந்தவர் குலத்தினில் சிறந்தவராம்
மேலவர் கீழவர் என்றே-வெறும்
வேடத்தில் பிறப்பினில் விதிப்பனவாம்
போலிச் சுவடியை யெல்லாம்-இன்று
பொசுக்கிவிட்டா லெவர்க்கும் நன்மை
யுண்டென்பான்

என்று கண்ணன் பாட்டில் பாடுகின்றார்.

காந்தியடிகளும்

'வருணாசிரமம் எத்தகைய குறுகிய நோக்கத்துடனும் உருவாக்கப்பட வில்லை என்பேத என் கருத்தாகும். அதற்கு மாறாக, தொழிலாளியான சூத்திரர்க்கும் சிந்தனையாளரான பிராமணருக்கும் சம அந்தஸ்து அளித்து, யோக்கியதை அதிகமாவதற்கும், குற்றங்குறைகள் ஒழிவதற்கும் அது இடம் அளித்தது. வருணாசிரமம் மனிதனின் பொதுவான ஆசாபாசங்களை லோகாயதமான கோளத்திலிருந்து ஆன்மிகமான சாசுவதமான மண்டலத்திற்கு மாற்றியது.

பிற்காலத்தில் வருணாசிரமத்தின் இந்த உன்னதமான கொள்கை இழிவான நிலையை அடைந்துவிட்டது. அர்த்தமற்ற வீண் சடங்குகளும் சிலர் தங்களை உயர்வானவர்கள் என்று நினைத்துக் கொள்வதும், மற்றவர்கள் மீது இழிநிலை சுமத்தப்படுவதும்தான் வருணாசிரமம் என்று ஆகிவிட்டது.' (காந்தி தொகுப்பு நூல் 7 பக் 73)

'இன்று வருணாசிரமம் என்ற பெயரில் உலவும் அரக்கனை எல்லா விதத்திலும் எதிர்த்துப் போராடுங்கள். அவ்விஷயத்தில் உங்களோடு நான் தோளோடு தோள் நின்று கொண்டு தொண்டு புரிவதைக் காண்பீர்கள்' (மேற்படி நூல் பக் 79)

மகா கவி பாரதியாரும்

'ஹிந்துக்கள் உலகத்திலுள்ள மற்றெல்லா ஜனங்களைக் காட்டிலும் ஜாதி வேற்றுமை பாராட்டுவதில் அதிகக் கொடுமை செலுத்துகிறார்கள்' (பாரதி கட்டுரைகள்-பக் 46)

என்கிறார். மேலும் சமயாச் சாரியார்களுள் ஒருவரான அப்பர் சுவாமிகள்:



சாத்திரம் பல பேசும் சழக்கர்காள்
கோத்திரமுங் குலமுங் கொண்டென் செய்வீர்?

என்று கேட்கிறார்.

சாதிமுறைமைகளைச் சாடிய சித்தர்கள் பலர் ஆரியர்களால் அக்காலத்தில் அழிக்கப்பட்டது போலவே வள்ளலார் சுவாமிகளும், மகாத்மா காந்தியும் அழிக்கப் பட்டிருப்பார்களோ என்று எண்ணத் தோன்றுகிறது. (வள்ளலார் சுவாமிகள் ஜோதியாக மாறி மறைந்து விட்டார் என்ற கருத்துப் பலரிடையே காணப்பட்டாலும் அவர் ஆரியர்களால் அழிக்கப்பட்டுப் பின்பு ஜோதியாக மறைந்து விட்டதாக அவர்களாலேயே அறிவிக்கப்பட்டார் என்ற கருத்தும் சிலரிடையே உண்டு)

வள்ளலார் சுவாமிகள் சாதிப்பற்றில்லாதவர், சாதி முறைகளை எள்ளி நகையாடிச் சாடியவர்.

**சாதியும் மதமுஞ் சமயமும் தவிர்த்தேன்**
**சாத்திரக் குப்பையுந் தவிர்த்தேன்**

என்றும்,

**சாதியும் மதமும் சமயமுத் பொய்யென**
**ஆதியில் உணர்த்திய அருட் பெருஞ்சோதி**

என்றும், பாடிய பாடல்களிலிருந்து இவைகளை அறிந்து கொள்ளலாம்.

(ம.பொ.சி-வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு பக் 199-205)

ஆரிய மார்க்கம் இந்து மார்க்கமாக மாறக் காரணமாயிருந்தது சாதி அடிப்படையே எனில் அது மிகையாகாது. காஞ்சி காமகோடி பீடம் ஸ்ரீ சங்கராச்சாரியாரின் கருத்துப்படி: 'சதுர் வர்ண முறையே இந்து மதத்தின் அஸ்திபாரம். இம் முறை

நீக்கப்பட்டால் இந்து மதம் அழிந்து போகும்" என்பதே. (The Madras Mail - March 30,1980)

ஏழைகளும், பிராமணர்களை எதிர்த்தவர்களும் கீழ்ச்சாதிகளாக்கப்பட்டனர். அக்காலங்களில் ஆலய வழிபாடுகளில் திராவிடத் தமிழனே கோயில் பூசாரிகளாய் இருந்தனர். இவர்களுக்கு வள்ளுவர்(பறையர்) என்று பெயர். இவர்கள் இறைவனைப் பறைசாற்றியதால் பின்னர் பறையர் என்றழைக்கப்பட்டனர். பாடல்களால் இறைவனைப் புகழ்ந்தவர்கள் பள்ளர் என்றழைக்கப்பட்டனர். பள்ளு என்பது பாடல் என்பதின் உயர் தமிழாகும்.

ஆரம்ப காலத்தில் சிறுசிறு ஊர்களிலும், குறுநில மன்னர்களிடமும் பின்னர் ஜமின் தார்களிடமும் தெய்வத் தொண்டு என்னும் பெயரில் அண்டிப் பிழைத்த ஆரியர் கொஞ்சம் கொஞ்சமாகப் பறையரைக் கீழ்ச் சாதிகளாக்கி ஊரைவிட்டு வெளியே. குடியிருக்கச் செய்து கோயில் பூசாரிகளாக மாறி பின்பு தாங்களே தெய்வத்தின் பிரதி நிதிகள் என்றும் தங்களையல்லாமல் மன்னர்கள் கூட எதுவும் செய்யக்கூடாது போன்ற நிலைமைகளையும் உண்டாக்கித் திராவிடத் தமிழனைத் தமிழனைக் கொண்டே ஒன்றுமில்லாமலாக்கினர்.

சாதிகளை ஆரியர் எற்படுத்திய போது, வெகுண்டெழுந்த சித்தர்கள் அவர்களுக் கெதிராகப் பாமரரும் விளங்கிக் கொள்ளும் வண்ணம் பாடல்களை எழுதினர். ஆனால் அப்படிப்பட்டவர்கள் அழிக்கப்பட்டனர். அவர்கள் பாடல்களும் மறைக்கப்பட்டன அல்லது அழிக்கப்பட்டன. கிடைத்த சிலவற்றுள் சில இங்கே தரப்படுகிறது. மாத



மாதம் தூமைதான், மறந்துபோன தூமைதான்
மாத மாற்று நின்றலோ வளர்ந்து ரூபம் ஆனது!
நாதமேது, வேதமேது, நாற்குலங்கள் ஏதடா?
வேதம் ஓதும் வேதியர் விளைந்தவாறும் பேசடா!

ஊறிநின்ற தூமையை உறைந்து நின்ற சீவனை
வேறுபேசி மூடரே விளைந்த வாற தேதடா?
நாறுகின்ற தூமையல்லோ நாற்குலங்கள் ஆயின
சீறுகின்ற மூடனே அத்தூய்மை நின்ற கோலமே!

பறைச்சியாவதேதடா பனத்தியாவதேதடா?
இறைச்சி, தோல் எலும்பினும் இலக்கமிட்டிருக்குதோ?
பறைச்சி போகம் வேறதோ பனத்திபோகம் வேறதோ?
பறைச்சியும் பனத்தியும் பகுத்துப்பாரும் உம்முளே!

**(சிவ வாக்கியர்)**

சாதிபேதமில்லை அகப்பேய்
தானாகி நின்றவர்க்கே
ஓதி உணர்ந்தாலும் அகப்பேய்
ஒன்றுந்தான் இல்லையடி

**(அகப்பேய் சித்தர்)**

சாதியாவதேதடா? சலந்திரண்ட நீரெலாம்
பூத வாசல் ஒன்றலோ, பூதம் ஐந்தும் ஒன்றலோ?
காதில் வாளி, காரை, கம்பி, பாடகம், பொன்
ஒன்றலோ?

சாதி பேதம் ஓதுகின்ற தன்மை என்ன தன்மையே

**(சிவாக்கியர்)**

சாதிப் பிரிவினிலே தீயை மூட்டுவோம்
என்று பாம்பாட்டி சித்தர் பாடினார். **(123ம் பாடல்)**

சாதிபேதங்கள் சொல்லுகிறீர் தெய்வம் தானென்றொருவுடல் பேதமுண்டோ? என்றார் கடு வெளிச் சித்தர்.

இப்படி அனேக சித்தர்கள் ஆரியரால் திணிக்கப்பட்ட சாதிகளை வெறுத்து எதிர்த்துக் குரல் எழுப்பினதின் காரணமாக நொறுக்கப்பட்டனர். அழிக்கப்பட்னர். 12ம் நூற்றாண்டில் நடந்த குகை இடிக் கலகம் இதற்குச் சான்றாகும். பிற்காலங்களில் இச் சித்தர் பாடல்கள் பள்ளிக் கூடங்களில் கற்பிக்கப்படவில்லை. காரணம் கல்வித் துறையையும் ஆரியர் தங்கள் வசப்படுத்திக் கொண்டு, தமிழுக்குத் தொண்டு செய்வது போல் தங்களுக்குச் சாதகமான பாடல்களை ஏற்றும் பாதகமான பாடல்களை அகற்றியும் வெகு தந்திரம் செய்தனர்.

சாதிகளை ஏற்படுத்தியதினால் சமுதாயம் எவ்வாறு சீரழிந்தது என்பதை எடுத்துச் சொன்னால் அது விரியும். ஆயினும் ஒரு சிலவற்றை எழுதாமலிருக்க இயலவில்லை.

சுதாவன் என்ற அரசன் சிறுபிள்ளைகள் முதற்கொண்டு வயோதிகர் வரையுள்ள பௌத்தர்களைக் கொல்லாத எவரும் கொலை தண்டனை பெறுவார்கள் என்று அறிக்கை செய்தான் (சங்கர விஜயம்)

(Quoted from confussion called conversion)

மூன்றாம் குலோத்துங்க சோழன் காலத்தில் மதுரை, திருநெல்வேலி போன்ற இடங்களில் உள்ள அனேகச் சமணர்கள் ஆரியர்களால் ஆயிரக் கணக்கில் கழுவேற்றப்பட்டனர். (Quoted from above book)



முதலாம் மகேந்திர வர்மன் காலத்தில் ஆயிரக் கணக்கான ஜைனர்கள் ஆரியர்களால் கொலை செய்யப்பட்டனர். தென் கர்நாடகத்தில் உள்ள பர்கூர் என்ற ஊர் தீயிட்டுக் கொளுத்தப்பட்டு அழிக்கப்பட்டது. அனேகத் தமிழர்கள் உயிரிழந்தனர்.

திருவாரூர், மயிலாப்பூர், திருப்போரூர், ஸ்ரீரங்கம், நாகப்பட்டிணம், திருப்பதி போன்ற இடங்களில் பறையர்களால் பரிபாலிக்கப்பட்டு வந்த கோயில்கள் ஆரியர்களினால் வசப்படுத்தப்பட்டன. (Quoted form the aove book)

பார்ப்பானுக்கு மூத்த பறையன் கேட்பாரற்றுக் கீழ்ச்சாதியானான் என்ற பழமொழியை இன்றைக்கும் தென்தமிழ்நாட்டில் கேட்கலாம்.

சாதிகளை ஏற்படுத்திய ஆரியர், தமிழர்களை ஒருவரோடொருவர் சாதியைக் கொண்டே மோதி ஒழித்துக் கட்டும் தந்திரத்தைக் கையாண்டனர். தனக்குச் சாதகமானவர்களைத் தங்களிலும் கீழ்சாதிகளாகவும் தனக்குப் பாதகமானவர்களைத் தீண்டத் தகாதவர்கள் எனவும் வேறுபடுத்தி அவர்களுக்குள் அடிக்கடி மோதல்களை உருவாக்கினார்கள்.

இன்றைக்கும் செய்தித் தாள்களில் அரிசனங்களுக்கும் ஜாதி இந்துக்களுக்கும் மோதல் என்ற செய்திகளைக் காண இயலும்.

நமது கிராமங்களில் சாதிக் கொடுமை எவ்வாறு தலை விரித்தாடுகிறது என்பதை நேரில் சென்று பார்ப்பவர்களுக்கே விளங்கும். உயர் சாதியினர் வசிக்கும் இடங்களிலுள்ள கிணறு அல்லது குளங்களில் ஆடு மாடுகள், கழுதைகள், பன்றிகள் கூட தண்ணீர் குடிக்க அனுமதிக்கும் உயர் சாதியினர் தங்களைப் போன்ற மனிதர்கள் கீழ்ச்சாதி என்ற ஒரே

காரணத்திற்காக தண்ணீர் கொள்ளவோ குடிக்கவோ அனுமதிப்பது இல்லை.

கல்விச் சாலைகளில் கீழ்ச்சாதி மாணவ மாணவியர் உயர்குல ஆசிரியர்களாலும் மாணவ மாணவியராலும் கீழ்த் தரமாக நடத்தப்படுகிறார்கள்.

அலுவலகங்களிலும் அப்படியே. தான் கீழ்ச்சாதி என்ற காரணத்தில் ஒரு உயர்நிலை காவல்துறை அதிகாரி தனக்குக் கீழ் வேலை செய்யும் உயர்குல போலீசிடம் அஞ்சியே வாழும் நிலை இன்றும் உண்டு.

கீழ்ச்சாதி என்ற ஒரே காரணத்தினால் நல்ல விளையாட்டு வீரர்கள், அறிஞர்கள், திறமையுள்ளவர்கள் பின்னுக்குத் தள்ளப்பட்ட நிலையை இந்நாட்டில் மட்டுமே காணலாம்.

**5.1.94**ம் தேதி தினமணி பத்திரிக்கையில் வெளியிடப் பட்ட செய்தியை இங்கே அப்படியே தருகிறோம். பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஒரு சகோதரி, கட்சிக்கு மாடாய் உழைத்த ஒரு ஏழைப் பங்காளி எவ்வாறு ஓரங்கட்டப்பட்டார்கள் என்பதைக் கோடிட்டுக் காட்டியிருக்கிறோம்.

**(தினமணி 5.1.94)**

இந்தியாவின் ஜனத்தொகையில் 88% கீழ்ச்சாதிகளே! ஆயினும் இவர்கள் ஆளப்படுவது மேல் சாதிகளாலே. பெரும்பாலும் எந்த ஒரு துறையிலும் மேல் அதிகாரி உயர்குலத்தோனாக அதிலும் ஆரியனாகவே இருப்பது கண்கூடு. வங்கிகள், அரசு நிறுவனங்கள், அலுவலகங்கள், வியாபாரத்துறை, அஞ்சல், ரயில், விமானம், தாரதர்ஷண் வானொலி போன்ற பணிகளில் பெரும்பாலும் அந்த இதைத்தாரே வாழ்ந்து வருகிறார்கள். இதிநிமித்தமே இட ஒதுக்கீடு முறை கொண்டு வரப்பட்டது. அப்படியிருந்தும்



தாழ்த்தப்பட்டோர் முன்னனேறி விட்டதாகக் கருத இயலாது. இட ஒதுக்கீடு பற்றிய கட்டுரை ஒன்றில் பேராசிரியர் அறிவரசன் அவர்கள் இவ்வாறு குறிப்பிடுகிறார்.

"நமது நாட்டில் மக்கள் அனைவரும் பிறப்பால் சொல்லப்படும் சாதி அடிப்படையிலேயே முற்பட்டவர் அல்லது பிற்பட்டவர் என அறியப் படுகின்றனர். வருமான வரம்பின் அடிப்படையால் அல்ல. எந்தச் சாதியிலும் பொருளாதாரத்தால் முற்பட்டவர்களும் பிற்பட்டவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். ஆனால் ஒருவருக்கு அவர் பிறப்பால் வரும் சாதியின் அடிப்படையிலேயே சமுதாய அந்தஸ்து கிடைக்கிறது என்பதுதானே இன்றைக்கும் நடைமுறையாக இருக்கிறது.

மறைந்த ஜெகஜீவன்ராம் பொருளாதார நிலையால் முற்பட்டவர். பார்-அட்-லா பட்டம் பெற்றுக் கல்வியாலும் முற்பட்டவராக விளங்கினார். மத்திய அரசியலிலும் உயர் நிலையில் இருந்தார். மத்திய அரசின் பாதுகாப்புத் துறை அமைச்சராகவும் இருந்தார். இவ்வாறு பல வகையிலும் முற்பட்டவராக இருந்தும் பிறப்பால் கீழ் சாதிக்காரர் - தீண்டத்தகாதவர் எனக் கருதப் பட்டதால்தான், அவர் திறந்து வைத்ததால் சம்பூர்ணானந்தாவின் சிலை தீட்டுப்பட்டு விட்டதாகச் சொல்லிப் பிறப்பால் உயர் சாதியினர் எனச் சொல்லிக் கொண்ட சிலர், கங்கை நீரால் அச்சிலையைக் கழுவித் தீட்டுக் கழித்தனர் என்பதை எளிதில் மறந்துவிட முடியாது.

இன்றும் சில ஊர்களில் பிறப்பால் கீழ்சாதி எனக் கூறப்படுவோர் பொருளாதாரத்தால் உயர்ந்தவர்களாக இருந்தாலும் கோயில்களில் நுழையக் கூடாதெனத் தடுக்கப்படுகின்ற நிலை இருப்பதை மறுக்க முடியுமா?

தென் காசிக் கோயில் கோபுரத்தைக் கட்டி முடிக்க அமைக்கப்பட்டிருந்த திருப்பணிக் குழுவிற்குத் தலைவராக இருந்தவர் சிவந்தி ஆதித்தன். பொருளாதாரத்தால் முன்னேறியவர் என்பதால்தான் தலைமைப் பொறுப்பு அவருக்கு வழங்கப்பட்டிருந்தது. பல இலட்சங்களை அந்தப் பணிக்கென நன்கொடையாக வழங்கினார். இரண்டாம் பராக்கிரம பாண்டியன் என்றுகூடப் பலரும் அவரைப் புகழ்ந்தனர். என்றாலும் அந்தக் கோபுரத்திற்குக் குடமுழுக்கு நடைபெற்ற போது, சிவந்தி ஆதித்தன், கருப்பையா மூப்பனார் போன்ற பொருளாதாரத்தில் உயர்ந்தவர்களும், கல்வியறிவால் மேம்பட்ட கிருபானந்த வாரியாரும் பிறப்பால் பிற்பட்டோர் எனக் கருதப்பட்டுக் கோபுரத்தின் கீழே நிறுத்தப்பட்டனர். பொருளாதாரத்தால் தாழ்ந்தோராயினும் பிறப்பால் உயர்ந்தோர் என்று கருதப்பட்ட சில சிவாச்சாரியார்கள் மட்டுமே கோபுரத்தின் உச்சிக்குச் சென்று வேத மந்திரங்கள் சொல்லிக் குடமுழுக்குச் செய்ய முடிந்தது.

அர்ச்சகர் ஆவதற்குரிய தகுதிகளில் பிறப்பால் வரும் சாதி தவிர்த்த பிற தகுதிகள் அனைத்தையும் பெற்ற எவரானாலும் அர்ச்சகராக நியமிக்கப்படலாம் எனக் கருணாநிதி முதலமைச்சராக இருந்தபோது, தமிழ்நாடு சட்ட மன்றத்தில் அனைத்து உறுப்பினர்களின் ஆதரவுடன் சட்டம் நிறைவேற்றப்பட்டது. அந்தச் சட்டம் செல்லாதென அறிவிக்கக் கோரி உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்த பன்னிருவருள் பதினோரு பேர் பிறப்பால் உயர் சாதி எனப்படுவோர் ஆவர்.

இட ஒதுக்கீட்டிற்கு வருமான வரம்பு வேண்டும் எனக் குரல் கொடுப்போர் எவரும் குறிப்பிட்ட வரம்பிற்குக் கீழ் வருமானம் உள்ளோர் பிறப்பால் எந்த



சாதியைச் சார்ந்தவராக இருந்தாலும் அர்ச்சகராகலாம் எனச் சட்டம் இயற்றுமாறு குரல் கொடுக்க முன்வராதது ஏன்?

சிவாஜி கணேசனும் கலைஞர் கருணாநிதியும் பொருளாதாரத்தைக் காரணம் காட்டி ஒரு அய்யங்கார் குடும்பத்தில் அல்லது ஐயர் குடும்பத்தில் திருமண உறவு கொள்ள முன் வந்தால் அதற்கு அக்குடும்பங்கள் இடம் கொடுக்குமா?

பிறப்பால் வரும் சாதிதான் முற்பட்டவரா பிற்பட்டவரா என ஒருவரைப் பிரித்துக் காட்டுகிறது.

தீண்டாமையைக் கடைப்பிடிப்பது குற்றம் என அரசியல் சட்டத்தின் 17ம் பிரிவு குறிப்பிடுகிறது. ஆதுபோல் பிறப்பால் சாதி சொல்வதும் உயர்வு தாழ்வு கற்பிப்பதும் குற்றம் என்று அரசியல் சட்டம் சொல்லுமானால், பிறப்பால் மக்கள் அனைவரும் சமம் என்பதை மதத் தலைவர்களும் ஏற்றுக் கொண்டு மக்களிடையே பிரசாரம் செய்வார்களேயானால், அதன் பிறகு சாதி அடிப்படையில் இடஒதுக்கீடு கேட்பது தவறானதாக இருக்கலாம்.

தாழ்த்தப்பட்டவர்கள் குடியிருக்க ஊருக்கு வெளியில் இடம் ஒதுக்கப்பட்டது. உயர் சாதியினர் வாழ ஊருக்குள் இட ஒதுக்கீடு செய்யப்பட்டது. உயர்சாதியினர் என்று சொல்லப்பட்ட சிலரே கருவறைக்குள் நுழையலாம். பிற சாதியினர் கருவறைக்கு வெளியில் தான் நிற்க வேண்டும். இவ்வாறு அந்த நாளில் இட ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. அன்றைய இட ஒதுக்கீட்டிற்கு வருமான வரம்பு அடிப்படையாகக் கொள்ளப்படவில்லை. சாதி அடிப்படையிலேயே அந்த இட ஒதுக்கீடு செய்யப்பட்டது. இன்றைய இட ஒதுக்கீட்டிற்கு மட்டும்

வருமானத்தை வரம்பாக்க வேண்டுமென்பது எப்படிச் சரியாகும்?" (தினமணி 31 டிசம்பர் 1993 பக்கம் 2)

சாதிகளை வர்ணாசிரம தர்மம் என்ற பெயரால் ஏற்படுத்தி ஆரியர் தவிர பேறு யாரும் வேதம் படிக்கக்கூடாது என்ற கட்டளை பிறப்பித்துப் பின்பு கல்வியையே தாழ்த்தப்பட்டவர்களின் கண்களுக்கு மறைத்து, அவர்களை ஆடுமாடுகள் போல குற்றேவல் செய்யும் கொத்தடிமைகளாக்கி அனுபவித்து வந்த நாட்கள் மறப்பதற்கில்லை.

பெரியார் போன்ற சீர்திருத்த வாதிகள் தோன்றியிருக்காவிட்டால் இந்த நிலைமையைக் கூட தமிழ் திராவிடன் பெற்றிருக்க இயலாது.

தங்களுடைய மதத்தை நிலைநிறுத்தவே சாதிகளை வகுத்தனர் ஆரியர் என்பது கண்கூடு. கடவுள் சாதியைப் படைக்கவில்லை. கடவுளின் பெயரால் எழுதப்பட்ட வேதங்களிலும் சாதி இல்லை.

பைபிளில், கிறிஸ்து இயேசுவுக்குள் யூதனென்றுமில்லை, கிரேக்கனென்றுமில்லை, அடிமையென்றுமில்லை, சுயாதீனனென்றுமில்லை, சுயதேசத்தானென்றுமில்லை, புற சேதத்தான் என்றுமில்லை. யாவரும் கிறிஸ்துவுக்குள் ஒன்றாயிருக்கிறார்கள் என்றே காணப்படுகிறது. ஆரியர்களால் உண்டாக்கப்பட்ட தாழ்ந்த சாதியைச் சேர்ந்த ஒருவன் பைபிள் படித்துப் பட்டம் பெற்றால் அவனைக் கிறிஸ்தவ உலகம் பூசாரியாக, பாதிரியாக, ஆலய வழிபாடு நடத்த அனுமதிக்கிறது, ஏற்றுக் கொள்கிறது.

ஏனெனில் கிறிஸ்து இயேசுவைத் தலையாகவும் அவரை ஏற்றுக் கொள்கிறவர்களை சரீரத்தின் ஒரு அங்கமாகவும் கிறிஸ்தவம் கருதுகிறது. எந்த சாதியைச்



சேர்ந்தவராயினும் கிறிஸ்தவதேவ ஆலயங்களுக்குப் போகலாம். வேதம் படிக்கலாம். குருவாகவும் ஆகலாம். ஏனெனில், கிறிஸ்து ஜாதியை ஏற்படுத்தவில்லை, யாவரையும் தமக்குள் ஒன்றாக்கவே கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார்.

இப்படிப்பட்ட நற்செய்தியைக் கேட்ட போது, ஆரியர்களால் கீழ்ச்சாதிகள் என்றும் தீண்டத்தகாதவர்களென்றும் ஒதுக்கி வைக்கப்பட்ட மக்கள் பெருவாரியாக அம்மார்க்கத்தைப் பின்பற்ற முன்வந்தனர். உடனே உயர்சாதிப் பிரிவினர் மதம்மாறுகிறார்களென்றும் மதம் மாற்றுகிறார்களென்றும், ஏதோ இந்துமதத்திற்குத் தாங்களே காவலாளிகள் என்பது போல கூச்சலிடவும் அராஜகங்களை ஏற்படுத்தவும் முற்பட்டனர்.

அதே சமயத்தில் கிறிஸ்தவ மார்க்கத்தினரிலும் சிலர் சாதி வித்தியாசம் காட்டுவது வருந்தத் தக்கது. சாதிப் பாகுபாடு காட்டும் எந்த மதமும் அழிந்து போவது நாட்டுக்கு நல்லது, சமுதாயத்திற்கு நல்லலு.

சாதி ஒழிந்தால் அனேகக் கலவரங்கள், கட்சிப் பூசல்கள், பிரச்சினைகள் ஒழியும்.

சாதிகள் இல்லையடி பாப்பா குலத் தாழ்ச்சி சொல்வது பாவம் என்ற பாரதியின் கனவு நினைவாகட்டும்.

உலக முழுவதையும் உய்விக்க வந்த இயேசுக் கிறிஸ்துவில் சாதி கிடையாது. கிறிஸ்துவின் மார்க்கமே சாதி ஒழிப்புக்கு வித்திட்டது. எத்தேசத்தோராயினும் என்ன சாதியாயினும் கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளும்

போது அவர்கள் கிறிஸ்தவர்கள் என்றழைக்கப் படுகிறார்கள்.

இந்தியாவின் பூர்வ வேதமாகிய ரிக் வேதத்தின் புருஷ சூக்தத்தில் புருஷ பிரஜாபதியின் முகமே பிராமணன் என்றும் கைகளே க்ஷத்ரியர் என்றும் தொடைகளே வைசியர் என்றும் கால்களே சூத்ரர் என்றும் இந்நான்கு வித வகுப்பாரும் சேர்ந்தே புருஷ பிரஜாபதி யென்றும் காட்டப்பட்டுள்ளது. மேலும், இறைச் சிந்தனையாளனாயிருந்து இறைத் தொண்டு செய்து புனித வாழ்க்கை நடத்துகிறவனே பிராமணன் என்றும் நாட்டைப் பாதுகாக்க விழிப்புடன் இருப்பவன் க்ஷத்ரியன் என்றும் வியாபாரம் செய்வோர் வைசியன் என்றும் பொது நல வேலை செய்வோர் சூத்ரர் என்றும் புருஷ சூக்தம் சொல்லுகிறது.

அப்படியானால் ஆரியரால் உண்டாக்கப்பட்ட கீழ்ச் சாதிகளில் ஒருவன் இறைச்சிந்தனையாளனாக இருந்து இறைத்தொண்டு செய்து தன் வாழ்க்கையைப் புனிதமாக வைத்துக் கொள்வானானால் அவன் பிராமணனே!

பிறப்பால் தங்களை உயர்சாதியென்று சொல்லிக் கொள்ளுகிற ஆரியப் பிராமணர்களில் யார்யார் காவல் துறை நிர்வாகத்திலும், இராணுவத்திலும், கட்சிப் பணிகளிலும் இருக்கிறார்களோ அவர்கள் யாவரும் க்ஷத்ரியர் என்பதே உண்மை.

பிறப்பால் தங்களை உயர்சாதியென்று சொல்லிக் கொள்ளுகிற ஆரியப் பிராமணர்களில் யார் யார் வியாபாரம் அல்லது தொழில் செய்கிறார்களோ அவர்கள் யாவரும் வைசியர் என்பதே உண்மை.

அதேபோல, பிறப்பால் தங்களை உயர்சாதியென்று சொல்லிக் கொள்ளுகிற ஆரியப்



பிராமண்ர்களில் யார் யார் சமூக சேவை அல்லது அலுவலகங்களில் பணியாற்றுகிறார்களோ அவர்கள் யாவரும் சூத்ரர் என்பதே உண்மை.

பிறப்பால் ஆரியரால்லாத யார் யார் இறைச் சிந்தனையாளராய், இறைப்பணி செய்து புனித வாழ்வு நடத்துகிறார்களோ அவர்கள் யாவரும் பிராமணர் என்பதே உண்மை.

18ம் நூற்றாண்டில் வாழ்ந்த சோதி இராமலிங்க சுவாமிகள் நால் வருணப் பாகுபாட்டை, சாதி வேற்றுமையை வெறுத்தவர். அவருடைய பிரசாரங்களில் சாதி வேற்றுமைகளைக் கண்டித்துப் பாடியும் பேசியும் இருக்கிறார். அதினாலேயே சைவ மடாதிபதிகளுக்கும் அவர்களைச் சார்ந்து வாழ்ந்த சைவாகமப் பண்டிதர்களுக்கும் வள்ளளாரைப் பிடிக்கவில்லை. ஏனெனில் சைவ மடங்கள் அனைத்தும் சாதி வழி அமைத்து, அச்சாதி வழியிலேயே ஆதின கர்த்தர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு நிர்வகிக்கப்படுகின்றன. இன்றும் அப்படித்தான். இதற்காக அக்காலத்தில் யாரும் வெளிப்படையாக வள்ளலாரை எதிர்க்கவில்லை யெனினும் ஆறுமுக நாவலர், சபாபதி நாவலர் போன்ற ஆகமப் பண்டிதர்கள் பாடிய மருட்பாப் பாடல்களில் எதிர்ப்பின் தொனியை அறியலாம்.

வருணாசிரமம் மற்றும் சாதிப்பிரிவுகளைக் குறித்துப் பாடிய இராமலிங்க அடிகள் இவையாவும் பிள்ளை விளையாட்டு என்றார்

"நால் வருண்ம் ஆசிரமம் ஆசாரம் முதலா
நவின்ற கலைச் சரிதமெலாம் பிள்ளை விளையாட்டே
மேல் வருணம் தோல் வருணம் கண்டறிவார் இலைநீ
விழித்திதுபார் என்றெனக்கு விளம்பிய சற்குருவே"

என்றும்

"இருட்சாதி தத்துவச் சாத்திரக் குப்பை
இருவாய்ப் புன்செயில் எருவாக்கிப் போட்டு
மருட்சாதிச் சமயங்கள் மதங்களாச்சிரம
வழக்கெலாம் குழிக்கொட்டி மண்மூடிப் போட்டுத்
தெருட்சாருஞ் சுத்தசன்மார்க்க நன் நீதி
சிறந்து விளங்க ஓர் சிற்சபை காட்டும்
அருட்சோதி வீதியில் ஆடச் செய்தீரே
அருட் பெருஞ்சோதி என் ஆண்டவர் நீரே"

என்றும் பாடிய வள்ளலாரின் பாடல்கள் சிந்தனைக்குரிய வைகளாகும். (வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு -மா.பொ.சி. பக்கம் 200)

ஆரியர்களால் ஏற்படுத்தப்பட்ட சாதிமுறைமைகளும், சாத்திரங்களும், இந்துமதமும் இராமலிங்க சுவாமிகளுக்கு ஏற்புடையதல்லவென்பதை அவருடைய பாடல்களிலிருந்தே உணர இயலும். சுவாமிகளின் சொல்வாக்கும் செல்வாக்கும் தமிழர்களிடையே தீவிரப் புத்துணர்வை ஏற்படுத்தின. சுவாமிகளின் அருட்பாக்கள் இல்லங்கள் தோறும், வீதிகள் தோறும், கோயில்கள் தோறும் பாடப் பட்டமையினால் பொறாமை கொண்ட ஆரியர்கள் எங்கே தங்கள் செல்வாக்கு அழிந்துவிடுமோ என்று கண்டு, சுவாமிகள் மீது வழக்குத் தொடுத்தும், இலங்கையிலிருந்து ஆறுமுக நாவலரை அழைத்து அருட்பா பாடின சுவாமிகளுக்கு எதிராக மருட்பா பாட வைத்தும் அழிக்க முயற்சித்துத் தோற்றனர். தோற்கவே, அவரை ஒழித்துக் கட்டிவிட்டி, ஜோதியாக மன்றந்து விட்டார் என்று கதைகட்டினர் என்ற ஒருசிலரின் கருத்து ஆராய்ச்சிக்குரியதாகும்.



தங்களுடைய வளர்ச்சிக்கும் வாழ்வுக்கும் பாதகமானவர்களை அழித்து விடுவது ஆதிமுதல் ஆரியர்களுக்குக் கைவந்த கலையாகும். சரித்திரம் அறிந்தோர் இவ்வுண்மையை அறிவர்.

சாதிகள் ஒழிக்கப்படும் வரை சமுதாயத்தில் எவ்வித முன்னேற்றமும், சமாதானமும், மகிழ்ச்சியும் ஏற்படப் போவதில்லை.

இச் சாதிகளை ஒழிக்க என்ன செய்யலாம்?

1. சாதிகளை ஏற்படுத்திய சாத்திரக் குப்பைகளையும், மனிதர்களையும் திருத்தி அமைக்க வேண்டும்.

2. வேதங்களில் சொல்லப்பட்டுள்ள நால்வருண மக்கள் பற்றிய உண்மைச் செய்தியை மக்களுக்கு விளக்கிச் சொல்வதுடன் வாழ்க்கையிலும் கடைப்பிடிக்கச் செய்யவேண்டும்.

3. ஒரு குறிப்பிட்ட சாதியினருக்கே கோயில் அர்ச்சகர் வேலை என்ற நிலைமாறி, பிறப்பால் வரும் சாதி தவிர்த்த பிற தகுதிகள் அனைத்தையும் பெற்ற எவரானாலும் அர்ச்சகராக நியமிக்கப் படலாம் என்ற கலைஞர் அவர்களின் தமிழ்நாடு சட்ட மன்றத்தால் அனைத்து உறுப்பினர்களின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்ட சட்டம் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட வேண்டும்.

4. எல்லாமனிதரும் சமமானவர்கள்-சாதிவேற்றுமை இல்லை, சாதியே இல்லை என்பதை எல்லா மதத் தலைவர்களும் மக்களுக்கு அறிவிக்கும் படிச் செய்ய வேண்டும்.

5. சம பந்தி என்ற கண்துடைப்பு 'ஜோக்'குகளைக் கைவிட்டு சம்பந்திகளாகும் படிக் கலப்புத் திருமணங்கள் ஏற்படுத்த வேண்டும்.

6. சாதி, மத வெறி பிடித்த கட்சிகள், கட்சித் தலைவர்கள் புறக்கணிக்கப்பட வேண்டும்.

7. மேலை நாடுகளைப் போல எந்த வேலையையும் எவர் வேண்டுமானாலும் செய்யலாம், அதற்கான தகுதியிருந்தால் போதும் என்ற மனப்பான்மையை உருவாக்கவேண்டும். உதாரணமாக ஆரியரால் உண்டாக்கப்பட்ட பிறப்பால் செட்டியார் சாதியைச் சேர்ந்த ஒருவர் செருப்புத் தொழிலும் செய்யலாம், அர்ச்சகராகவும் இருக்கலாம். ஐயர்களும் ஐயங்கார்களும் அர்ச்சகர்களாகவும் இருக்கிறார்கள, மோட்டார் தொழிலதிபராகவும், வங்கிகளில் ஊழியராகவும் இருக்கிறார்கள். ரயில்வே பிளாட்பாரத்தில் நீர் 'சப்ளை'யாளர்களாக இருக்கவும் அவர்கள் தயங்குவதில்லை. அதுபோல யாவரும் எந்த வேலையைச் செய்வதற்கும் தயங்கக் கூடாது. நாவிதர் மட்டுமே முடிதிருத்தும் வேலையைச் செய்யவேண்டுமென்பதில்லை. ஆரியரும் அதைச் செய்யலாம். கலையுணர்வுடன் செய்தால் எதிலும் உற்சாகம் வரும்.

8. மனித ஜாதியான சகல ஜனங்களையும் இறைவன் ஒரே இரத்தத்தினால் தோன்றப் பண்ணி பூமியின் மீதெங்கும் குடியிருக்கச் செய்து, முன் தீர்மானிக்கப்பட்ட காலங்களையும் அவர்கள் குடியிருப்பின் எல்லைகளையும் குறித்திருக்கிறார் என்று பைபிள் சொல்லுவது போல, வெள்ளை, மா, கருப்பு, சிவப்பு போன்ற நிறங்களையுடைய தோல்களைப் போர்த்தியிருக்கிற உலகின் எல்லா மனிதர்களுக்குள்ளும் சிவப்பு நிற இரத்தமே ஓடுகிறது என்றறிந்து உலகின் எந்த மூலையில் எந்த மனிதனும் தன் இனமே என்ற பரந்த மனப்பான்மை யுண்டாகும் எ்ண்ணங்களை வளரவிட வேண்டும்.



9. ஜனங்களைச் சரீரமாகவும் தம்மைத் தலையாகவும் வைத்துத் தனக்குள் யாவரும் சமம் என்ற மெய்யுணர்வை எற்படுத்திய கிறிஸ்து இயேசுவின் அருட் போதனைகளை யாவரும் அறியும்படிப் பரப்பிட வேண்டும்.

**10. பைபிள் சொல்லும் சில கருத்துக்கள்:**

எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபைக்கு அவரை (இயேசுக் கிறிஸ்துவை) எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார்.

**(எபேசியர் 1:23)**

நீங்களே கிறிஸ்துவின் சரீரமாயும் தனித்தனியே அவயவங்களாயு மிருக்கிறீர்கள் (I கொரிந்தியர் 12:27) அநேகாராகிய நாமும் கிறிஸ்துவுக்குள் ஒரே சரீரமாயிருக்க, ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக்கிறோம்.

**(ரோமர் 12:5)**

எப்படியெனில், சரீரம் ஒன்று, அதற்கு அவயவங்கள் அநேகம்; ஒரே சரீரத்தின் அவயவங்களெல்லாம் அநேகமாயிருந்தும், சரீரம் ஒன்றாகவே இருக்கிறது. அந்தப் பிரகாரமாகக் கிறிஸ்துவும் இருக்கிறார். நாம் யூதராயினும், கிரேக்கராயினும் (இந்தியராயினும், ஐரோப்பியராயினும், ஆப்பிரிக்கராயினும் அமெரிக்கராயினும், இங்கிலாந்தியராயினும் ஆஸ்திரேலியராயினும்) அடிமைகளாயினும் சுயாதீனராயினும் எல்லொரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டு, எல்லோரும் ஒரே ஆவிக்குள்ளாகவே தாகம் தீர்க்கப்பட்டோம். சரீரமும் ஒரே அவயவமாயிராமல் அநேக அவயவங்களாயிருக்கிறது. காலானது நான்

கையாயிராதபடியினால் நான் சரீரத்தின் அவயவமல்லவென்றால், அதினாலே அது சரீரத்தின் அவயவமாயிராதோ?... சரீரத்தில் பிரிவினையுண்டாயிராமல், அவயவங்கள் ஒன்றைக் குறித்து ஒன்று கவலையாய் இருக்கும் படிக்கு தேவன் சரீரத்தை அமைத்திருக்கிறார். ஆதலால் ஒரு அவயவம் பாடுபட்டால் எல்லா அவயவங்களும் பாடுபடும். ஒரு அவயவம் மகிமைப் பட்டால் எல்லா அவயவங்களும் மகிமைப்படும்.

நீங்களே கிறிஸ்துவின் சரீரமாயும் தனித்தனியே அவயவங்களாயுமிருக்கிறீர்கள். **(I கொரிந்தியர் 12;12-27)**

மேற்கண்ட பைபிளின் பகுதிகளுக்கும் ரிக், யஜுர் வேதங்களில் காணப்படும் புருஷ பிரஜாபதி குறித்த தத்துவங்களுக்கும் வித்தியாசமில்லை. இவ்வேதங்களின் நிறைவேறுதலாக இயேசு காணப்படுகிறார். இயேசு உலகில் புருஷனாக (மனிதனாக) வந்து தம்முடைய சரீரத்தைப் பலியாக்கி மரணத்தை ஜெயித்து உயிர்த்தெழுந்தார். தன்னை ஏற்றுக் கொள்கின்ற எவரையும் தன் சரீரமாகிய சபையில் ஒரு அவயவமாக்குகிறார். இப்படி உலகத்திலுள்ள யாவரையும் தமக்குள் ஒன்றுபடுத்தி சாதி மத இன பேதமின்றி மக்கள் சுபிட்சமாக வாழ வழி வகுத்து நானே வழி, சத்தியம், ஜீவன் என்று சொன்ன இயேசுவையல்லாமல் வேறுவழி இல்லை.

புருஷ சூத்தம் சொல்லுவது போல
நன்ய பந்த்தா அயனாய வித்யதே!
(இதைத் தவிற வேறு வழியே இல்லை)

ஜாதிகளுக்கென்று தேவாலங்களையும் சபைப் பிரிவுகளையும் வைத்திருக்கிற கிறிஸ்தவர்கள் மனம் திரும்பட்டும். தங்கள் சாதிகளுக்குள்ளேயே திருமணம் செய்து கொள்கிற பாரம்பரியம் மாறட்டும். கிறிஸ்து இயேசுவுக்குள் யாவரும் சமம்.



சாதி ஒழிய இயேசுவே வழி!
கிறிஸ்தவமே துணை!

இதை வாசித்ததினாலுண்டான உங்கள் கருத்துக்களை ஆதாரங்களுடன் எழுதினால் திருத்திக் கொள்ளவும் சேர்த்துக் கொள்ளவும் உதவியாக இருக்கும்.

(சாது செல்லப்பாவின் குடும்பத்தில் பிள்ளை, முதலியார், தேவர், பள்ளர், நாடார், பிராமணர், ஜெர்மானியர், சுவிஸ், அமெரிக்கர் ஆகிய யாவரும் சம்பந்தப்பட்டுக் கிறிஸ்து இயேசுவின் பிராமணத்திற்குச் சாட்சியாக இருக்கிறார்கள்.)

சாதிப்பிரிவினைகளைத் தவிர்ப்போம்
சாதிக் கொடுமைகளை ஒழிப்போம்
சாதிச் சுரண்டல்களை தடுப்போம்
சாதி வெறிகளைக் களைவோம்.

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு.
வாழ்க இயேசு வாழ்க இந்தியா.

ஒன்றேகுலம் ஒருவனே தேவன்
இயேசு இல்லாமல் இரட்சிப்பு இல்லை.

உங்கள் ஊழியன்.
சாது செல்லப்பா.